C.C 368/15
PW 2
பெயர் வடிவேல்நாச்சியார்
தேதி 16.092022

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 25 வருடங்களாக துணை மேலளாராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்தன்று அலுவலில் இருந்ததற்கான ஆவணங்களை நான் போலிசாரிடம் தாக்கல் செய்துள்ளேன். அந்த சமயத்தில் ரமேஷ் என்பவர் பணிபுரிந்தார். அந்தசமயத்தில் நான் கிளை மேலாளராக பணிபுரிந்தேன். நகையை நகைமதிப்பீட்டாளர் நகையை பரிசோதித்து சான்று வழங்கும் போது நானும் நகையை பரிசோதித்து பார்ப்பேன்.சரிபார்க்கப்பட்ட நகையை தனித்தனியாக பொட்டலம் செய்து பாதுகாப்பு பெட்டகத்தில் நானும் உதவி மேலாளரும் வைப்போம். நகைமதிப்பீட்டாளர் அப்போது எங்களுடன் வரமாட்டார். ஒரு நபர் நகையை திருப்பவில்லை என்றால் அவருக்கு முறையாக அறிவிப்பு அனுப்பிநடவடிக்கை மேற்கொள்வோம் என்றால் சரிதான். அதற்காக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றால் சரியல்ல. நகை மதிப்பீட்டாளர் ரமேஷ் என்பவரை காப்பாற்றவேண்டும் என்பதற்காக உடனடியாக புகார் கொடுக்காமல் பொய்யாக 4ம் எதிரி மீது சேர்த்து புகார் கொடுத்துள்ளோம் என்றால்சரியல்ல. இந்த வழக்கிற்கும் 4ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் 4ம் எதிரியை நான் வங்கியில் பார்த்ததும் இல்லை. சந்தித்தது இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு போலி நகை சம்மந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி நம்பிக்கை மோசடி சம்மந்தப்பட்ட வழக்கா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நான் பணியில் இருந்தேன். மேற்படி குற்றசெயல் சம்மந்தமாக நான் பதவி இறக்கம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல. பதவி இறக்கம் செய்யப்பட்டதாக நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு என்னை குற்றவாளியாக விசாரிக்கபடவேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. பணி இறக்கம் சம்மந்தமாக எனது உயர்அதிகாரிகளுக்கு விளக்கம் அளித்தேனா என்றால் நான் பணி இறக்கம் செய்யபடவில்லை.